மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர்களின் நலநிதியச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2022) நிறைவேற்றப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(எ) தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022 (அ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

15. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—*தொடர்ச்சி*

(எ) தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல (திருத்தச்)*

2022 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2022), மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழகத்தில் இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்காக வெளிநாடு சென்று, வெளிநாடு வாழ் தமிழர்களுடைய நலனில் அக்கறையுள்ள தமிழினத் தலைவர், தமிழக மக்கள் முதல்வர் அவர்களின் பயணத்தை வாழ்த்தி, வணங்குகிறேன்.

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2022)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். சுருக்கமாகப் பேசுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மகத்தான நோக்கத்திற்காக இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், வெளிநாடு வாழ் தமிழ் மக்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இதனுடைய நோக்கக் காரணங்களை நான் படித்துப் பார்த்தேன். தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களின் நலனை உறுதி செய்வதற்கும், ஓய்வூதியம் மற்றும் பிற சார்ந்தவற்றுக்காகவும் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதேவேளையில், வெளிநாடுகளுக்குப் பணிக்குச் செல்கின்றபோது, அங்கு தமிழர்கள் இறக்க நேரிடுகின்றபோது, அவர்களுடைய

@ 24-3-2022 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. தி. வேல்முருகன்] [2022 மார்ச் 24

உடல்களை அவரவர்களுடைய சொந்த ஊர்களுக்குக் கொண்டுவருவதற்கு மாதக் கணக்கில், வருடக் கணக்கில் ஆகின்றது. மேலும், விமானக் கட்டணம் செலுத்த முடியாத சூழ்நிலையில், சில உடல்களை அங்கே அடக்கம் செய்கின்ற அவலமும் ஏற்படுகிறது. அதனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கலந்துபேசி, உடனுக்குடன் ஒன்றிய அரசினுடைய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களைத் தொடர்புகொண்டு, அங்கிருந்து இறந்தவர்களின் உடல்களைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற வகையில், இந்தச் சட்டமுன்வடிவு எதிர்காலத்தில் பயன்பட வேண்டுமென்கின்ற என்னுடைய கோரிக்கையை முன்வைத்து, இந்த மகத்தான சட்டமுன்வடிவை நான் மனதார வரவேற்கிறேன். மேலும், வெளிநாடு பயணம் மேற்கொள்ளும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், அண்ணன் தளபதி அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள். ஒரே வார்த்தையில், ஒரே வரியில் உரையை முடியுங்கள்.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அறிவுறுத்தலை என்றைக்குமே நாங்கள் மீறியது இல்லை. இருந்தாலும், ஒரு நிமிடம் தாருங்கள். குறிப்பாக, இந்தச் சட்டமுன்வடிவு ஒரு நல்ல சட்டமுன்வடிவு. நம்முடைய தமிழர்கள் பல்வேறு நாடுகளில் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்து, அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய இடத்தில், உக்ரைனில் உள்ள தமிழர்களை மீட்பதற்காக தமிழக அரசு எடுத்த முடிவுகள், மிகச்சிறந்த முடிவுகளாகும். இன்றைக்கு, அந்தத் துறை மூலமாக நடைபெற்ற பணிகள் இந்த உலகத்திற்கே தெரியும். ஆகையினால், இந்த அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு இருக்கக்கூடிய ஒரு முன்னுதாரணமான நிகழ்வாக இதை நான் பார்க்கிறேன். அதேநேரத்தில், இன்றைக்கு, வருத்தம் அளிக்கக்கூடிய ஒரு விஷயம் என்னவென்றால், இலங்கையில் நம்முடைய தமிழர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு, பெரிய அளவில் அவர்களுடைய சூழ்நிலை பாதிப்படைந்து இருக்கிறது. அதாவது, ஒரு பால் டின் வாங்க வேண்டுமென்றால்கூட, அவர்களுடைய பண மதிப்பில் ரூ.2,000/– என்ற அளவில், விலைவாசி கடுமையாக

2022 மார்ச் 24] [திருமதி S. விஜயதரணி]

ஏறியிருக்கின்றது. அந்த நாட்டினுடைய பண மதிப்பு ரூ.2,000/– என்றால், நம்முடைய பண மதிப்பு ரூ.1,000/– ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அது அந்த நாட்டிலுள்ள பிரச்சினையாகும். நீங்கள், இந்த* Bill–*ன்மீது ஒரு வார்த்தை சொல்லிவிட்டு, அமருங்கள். (குறுக்கீடு)*

திருமதி S. விஜயதரணி: *இந்த* Bill *சம்பந்தப்பட்டதுதான். ஆனால், நம் தமிழர்கள் என்றைக்காவது நம்மை அணுகி வருகின்றபோது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்வதைக் கொஞ்சம் புரிந்துகொள்ளுங்கள். உலகம் முழுவதும் நம்முடைய மக்கள் இருக்கின்றார்கள். அது மத்திய அரசு சம்பந்தப்பட்டது. அதில் தலையிட்டு, நாம் ஒன்றும் உடனே பதில் சொல்லிவிட முடியாது. (குறுக்கீடு) நீங்கள், இந்த* Bill–*மீது பேசுவதற்கு ஏதாவது இருக்கின்றதா? (குறுக்கீடு) இந்தச் சட்டமுன்வடிவு குறித்து ஒரு வார்த்தை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே, நான் ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். அதாவது, துயரமான இந்தச் சூழ்நிலையில், இன்றைக்குத் தமிழர்கள் தவிக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன். அவசியமென்றால், இந்தத் துறை உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடு சென்று வாழக்கூடிய தமிழர்கள், குறிப்பாக, வேலை தேடிச் செல்கின்ற இளைஞர்கள் அங்கு பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகின்றார்கள். அதாவது, கைது செய்வது, சிறையில் அடைப்பது, உயிரிழக்கக்கூடிய சம்பவங்கள்*

எல்லாம் நடைபெறுகின்றன. தாய் தமிழ்நாட்டில் இருக்கின்ற தமிழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கருணை உள்ளத்தோடு அவர்களையெல்லாம் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஷரத்தை இந்தச் சட்டமுன்வடிவில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அன்போடு வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி.

திரு. ஜி.கே. மணி: தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக, தமிழ்நாட்டின் முதலீட்டை ஈர்ப்பதற்காக, உயர்ந்த நோக்கத்திற்காக வெளிநாடு செல்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், இந்தச் சட்டமுன்வடிவின்மீது பேசுவதற்கு முன்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உக்ரைனில் பாதிக்கப்பட்ட அத்துணை தமிழர்களையும் மீட்பதற்காக, அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு, தனியாக குழு அமைத்தார்கள். இப்படி எந்த மாநிலத்திலும் குழுவை அமைத்து, பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை. அதற்காக நான் இந்த நேரத்திலே பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுவுமில்லாமல், அந்த நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உலகத்தில் இருக்கின்ற அனைத்து தமிழர்களுக்கும் 'நான் இருக்கிறேன், நான் பாதுகாப்பேன்' என்கின்ற அந்த நம்பிக்கை வார்த்தையைச் சொன்னார்கள். அதன் தொடர்ச்சியாக, இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அதற்காக, என்னுடைய வரவேற்பையும், பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வெளிநாட்டுப் பயணம் வெற்றியடைய என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

2022 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

பிற்பகல் 12—15

*__முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவில் இருப்பதைப்போல, தமிழ்நாட்டிலும் இதுபோன்ற ஒரு வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்பது தமிழ்நாட்டுக்கு வெளியே வாழக்கூடிய தமிழர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும். நிறுவனமாகப் பதிவு செய்ததை வாரியமாக மாற்றி, அதில் கூடுதலான உறுப்பினர்களைக் கொண்டு வரக்கூடிய அளவிற்கு இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருப்பதை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். ஐக்கிய அரபு அமீரகத்திலே வாழக்கூடிய தமிழர்கள் இந்தக் கோரிக்கையை நீண்ட காலமாகக் கோரியிருக்கின்றார்கள். இந்தச் சட்டத்தை சட்டமன்றத்தில் இயற்றிய சில மணிநேரங்களில், முதல் முறையாக, அரசுமுறைப் பயணமாக ஐக்கிய அரபு அமீரகத்திற்குச் செல்லக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக உளமாரப் பாராட்டுகின்றேன்; வாழ்த்துகின்றேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடு வாழ் தமிழர்களின் நலனுக்காகக் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வரவேற்கின்றேன். அதற்கு பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேவேளையில், நல்நோக்கத்திற்காக வெளிநாடு செல்லவிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் பயணம் சிறப்படைய வேண்டுமென்று வாழ்த்தி, அனுப்பி வைக்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடு வாழ் தமிழர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும், வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்லக்கூடியவர்கள் மற்றும் மாணவர்களுடைய பாதுகாப்பை

உறுதிப்படுத்தும் வகையிலும் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். அதேபோல, வெளிநாட்டிலே வாழ்கின்ற தமிழர்கள் உயிரிழக்க நேரிட்டால், அவர்களின் உடலை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதற்கு பல மாத காலமாகிறது. அதைக் கொண்டுவரும் செலவை தமிழக அரசு ஏற்க வேண்டுமென்ற திருத்தத்தையும் இச்சட்டத்திலே கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்திற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கும்வகையில் துபாய் செல்கின்ற இந்தப் பயணம் வெற்றி பெற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனதாரப் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடு வாழ் தமிழர்களுடைய நலனுக்காக கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பில் உளமார நான் வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன். அதேபோல, தமிழ்நாட்டினுடைய முதலீட்டுக்கு பலம் சேர்க்கிற வகையில், வெளிநாடு செல்லவிருக்கிற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை என் சார்பிலும், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் வாழ்த்தி, வழியனுப்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடு வாழ் தமிழர்களுடைய நலன் கருதி, திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக இங்கே வரவேற்று பேசிய அனைத்து உறுப்பினர்களுக்கும் இந்த மன்றத்தின் சார்பாகப் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். 2010—லே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், தாய் வயிற்றில் இருக்கின்ற கருவிலிருந்து ஒரு மனிதனுடைய பயணம் கல்லறைக்குச் செல்லும் வரையிலும் இந்தத் தமிழ் சமுதாயத்தைக் கட்டிக் காத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட*

இந்தச் சட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) 10 ஆண்டுக் காலம் நிலுவையில் இருந்தது. மீண்டும் அதை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர், மக்கள் முதல்வர் அவர்கள் தாயுள்ளத்தோடு இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு வழிவகை செய்திருக்கிறார். நல வாரியம் அமைத்தவுடன், இதன்மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்திலே துறை சார்பாக ஏற்கெனவே ஆய்வில் உள்ளது. கேரளாவைக் கடந்தும், இதில் சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்தில் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 16 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 16 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2022) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

16. துபாய் சர்வதேச தொழில் கண்காட்சியில் தமிழக அரங்கைத் தொடங்கி வைத்தல் மற்றும் தொழில் முதலீடுகளை ஈர்க்க வெளிநாடுகளில் பயணம் மேற்கொள்ளும் முதலமைச்சருக்கு பேரவைத் தலைவரின் வாழ்த்துரை மற்றும் முதலமைச்சரின் ஏற்புரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நம்முடைய மாண்புமிகு முதல்வர்*